**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.4236/ஆ5/2023, நாள்.18.10.2023**

.....

பொருள் பள்ளிக் கல்வி – DSM – தேசய எரிசக்தி பாதுகாப்பு (Energy Club) நாள் / வாரம் கொண்டாட்டம் – அரசு பள்ளிகளில் இது தொடர்பாக போட்டிகள் நடத்த தெரிவித்தல் – தொடர்பாக

பார்வை
1. சென்னை, முதன்மை பொறியாளரின் கடித எண். CE/IC,R&D and DSM/SE/DVSM/EE/DSM/AEE 3/DSM/F.EC DAY / D345/23, Dated.6.10.2023 (இவ்வலுவலகம் பெறப்பட்ட நாள். 09.10.2023)
2. இவ்வலுவலக கடித ந.க.எண்.4236/ஆ5/2023, நாள். 10.10.2023

•••••

பார்வை 1–ல் காணும் கடிதத்தில், அரசு பள்ளி மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், தேசிய எரிசக்தி பாதுகாப்பு தினம் மற்றும் தேசிய எரிசக்தி பாதுகாப்பு வாரம் (National Energy Conservation day / week) கொண்டாப்பட்டு வருகிறது. அதன்படி 2023 அக்டோபர் மாதத்தில் ஏற்கனவே எரிசக்தி கிளப்புகள் (Energy Club) நிறுவப்பட்ட பள்ளிகளில் ஆற்றல் சேமிப்பு மற்றும் ஆற்றல் திறன் (Energy Conservation & Energy Efficiency) தொடர்பான போட்டிகள் நடத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக Energy Club உள்ள பள்ளிகள் ஆற்றல் சேமிப்பு மற்றும் ஆற்றல் திறன் (Energy Conservation & Energy Efficiency) பற்றிய தலைப்பில் போட்டிகள் அக்டோபர் மாதத்தில் நடத்தப்பட்டு முதல் மூன்று இடங்களில் வெற்றி பெற்ற மாணவர்களின் விவரம் 31.10.2023–க்குள் மாவட்டத்திற்காக Energy Club–க்காக உருவாக்கப்பட்ட Whatsapp குழுவில் பகிருமாறும் மேலும் இவ்வலுவலக ஆ5 பிரிவில் ஒப்படைக்குமாறு பார்வை 2–ல் காணும் இவ்வலுவலக கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது.

. எனவே இப்பொருள் சார்பாக போட்டிகள் நடத்தி முதல் மூன்று இடங்களில் வெற்றி பெற்ற மாணவர்கள் விவரம் குறிப்பிட்ட தேதிக்குள் இவ்வலுவலகத்தில் ஒப்படைக்குமாறு சார்ந்த அரசு பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் கேடுக்கொள்ளப்படுகிறார்கள்.

//ஒப்பம்//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்கள்,
அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகள்
வேலூர் மாவட்டம்.
நகல்–

1. முதன்மை பொறியாளர்,
   4வது தளம், கிழக்கு பிரிவு,
   144, அண்ணாசாலை,
   சென்னை –2
2. மாவட்டக் கல்வி அலுவலர்,
   (இடைநிலைக் கல்வி)
   வேலூர் மாவட்டம்.
   (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு
   இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)